[திருமதி என். கயல்விழி செல்வராஜ்] [2022 ஏப்ரல் 29

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. அரசினர் தனித் தீர்மானம்

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு உதவும்வகையில், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகளை அனுப்பி வைக்க தேவையான ஏற்பாடுகள் செய்து, உரிய அனுமதிகளை வழங்க ஒன்றிய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் சூழ்ந்த இலங்கை நாடு, இன்று கண்ணீரால் சூழப்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆளுங்கட்சியாக இருந்தபோதும், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் ஆற்றிய பணிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

2022 ஏப்ரல் 29] [திரு. மு.க. ஸ்டாலின்]

'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பதைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இரத்தத்தில், உணர்வில், வாழ்வில் கலந்த ஒரு பிரச்சினையாக இலங்கைப் பிரச்சினை இருந்து வருகிறது. இலங்கையில் வாழக்கூடிய ஈழத் தமிழர் நலன் கருதி அரசியல்ரீதியாகப் பல்வேறு முழக்கங்களை வெவ்வேறு காலக்கட்டங்களில் நாம் முன்வைத்திருக்கிறோம். காலச்சக்கரம் இலங்கை மக்களை அலைக்கழித்து எங்கோ கொண்டு போய் நிறுத்திவிட்டது. இருப்பினும், இன்றைய நாள், மனிதாபிமான அடிப்படையில் நாம் கைகொடுக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய நிலைப்பாடு ஆகும்.

தற்போது இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான காரண, காரியத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அதேநேரத்தில், அங்குள்ள மக்கள் படக்கூடிய துன்பங்கள், துயரங்கள் நம் அனைவருடைய மனதிலும் சோகத்தை உருவாக்கியிருக்கிறது.

இலங்கை முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. பெட்ரோல், டீசலுக்காக வாகனங்கள் பல மணி நேரம் வரிசையிலே காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் வாங்க பொது மக்கள் 6 மணி நேரம் காத்திருக்க வேண்டிய ஒரு அவல நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில் கடுமையான தட்டுப்பாடும் இருக்கிறது. இதனால் சமையல் செய்வதே சிக்கலுக்குரியதாக மாறியிருக்கிறது என்று செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. நாடு முழுவதும் மின்சாரத் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசு மற்றும் தனியார் அலுவலகங்களும் செயல்பட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. பல அத்தியாவசியப் பொருட்களுடைய விலை பன்மடங்கு உயர்ந்து கொண்டே போகிறது. பேருந்துகள், இரயில்கள் ஆகிய போக்குவரத்துச் சேவைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன; பல இடங்களில் அவை நிறுத்தப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11–50

இரசாயன உரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், மலையகப் பகுதிகளில் தேயிலை விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலும் நமக்கு வருகிறது. இதனால், தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியக்கூடிய மலையகத் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கை நாடு முழுவதும்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 ஏப்ரல் 29

உயிர்காக்கும் பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் இரசாயன உரம் கிடைக்காதது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சாதாரணமாக 1,200 ரூபாய்க்குக் கிடைத்த உர மூட்டை தற்போது 32,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பால் விலை, பால் பவுடர் விலை, உணவுப் பொருள்கள் விலை என அனைத்தும் பல நூறு மடங்கு உயர்ந்துவிட்ட காரணத்தால் பச்சிளம் குழந்தைகளும்கூட துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டு நம் நெஞ்சம் பதைபதைக்கிறது. மொத்தத்தில் இலங்கை மக்களின் வாழ்க்கை என்பது மிக மிக மோசமான நிலையை அடைந்துள்ளது.

அண்டை நாட்டுப் பிரச்சினையாக இதை நாம் பார்க்க முடியாது. அங்கு யார் ஆட்சியில் இருக்கிறார்கள்; அவர்கள் எத்தகையவர்கள் எனப் பார்க்க இயலாது. அந்த நாட்டு மக்களுக்கு நம்மால் ஆன உதவியை நாம் செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இலங்கையில் இருந்து இத்தகைய செய்திகள் வந்ததுமே, ஈழத் தமிழ் மக்களுக்கு நம்மால் ஆன அனைத்தையும் வழங்குவோம் என்று நான் அறிவித்தேன். பிரதமர் அவர்களை 31–3–2022 அன்று நான் நேரிலே சந்தித்து வலியுறுத்தினேன். அப்போது அதனை அறிந்து இலங்கைத் தமிழர் தலைவர்களும், சில தமிழ் அமைப்புகளும் எனக்கு வைத்த கோரிக்கை, "தனியாகத் தமிழர்களுக்கு மட்டும் உதவி என்று அனுப்ப வேண்டாம்; இலங்கை மக்களுக்கு என்று பொதுவாக அனுப்புங்கள்; மக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டாம்; அனைத்து இன மக்களும் சேர்ந்துதான் இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அதைக் கேட்டபோது நான் நெகிழ்ந்து போனேன். என்னால் உணர்ச்சிப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதான் தமிழர் பண்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி) "பகைவர்க்கும் அருள்வாய் நன்நெஞ்சே" என்பதைப் போல, இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. இந்த நிலையில், ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக நாம் உதவிகள் செய்தாக வேண்டும். அந்த வகையில் பின்வரும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கலாம் எனத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது:

2022 ஏப்ரல் 29] [திரு. மு.க. ஸ்டாலின்]

- முக்கியமாக, 40 ஆயிரம் டன் அரிசி; இதனுடைய ஒட்டுமொத்த மதிப்பு சுமார் 80 கோடி ரூபாய்; (மேசையைத் தட்டும் ஒலி)

- அதேபோல், உயிர் காக்கக்கூடிய 137 மருந்துப் பொருட்கள்; இதன் மதிப்பு 28 கோடி ரூபாய்; (மேசையைத் தட்டும் ஒலி)

- குழந்தைகளுக்கு வழங்க 500 டன் பால் பவுடர்; இதன் மதிப்பு 15 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி)

இவற்றையெல்லாம் இலங்கையில் வாழக்கூடிய அனைத்து மக்களுக்கும் நாம் வழங்க நினைக்கிறோம். இவற்றை மாநில அரசு நேரடியாக வழங்க முடியாது. ஒன்றிய அரசின் அனுமதியோடு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் வழியாகத்தான் வழங்க வேண்டும். இலங்கையில் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டதுமே, இந்திய அரசிடம் இதுகுறித்த கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

31–3–2022 அன்று டெல்லி சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதும் இதனை நான் வலியுறுத்தியிருக்கிறேன். அதனைத் தொடர்ந்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டும் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அவருக்கும் 15–4–2022 அன்று கடிதம் எழுதி நினைவூட்டியிருக்கிறேன். இன்றுவரை எந்தத் தகவலும் இல்லை. ஆனால் அங்கு நிலைமை தற்போது மிகவும் மோசமடைந்துள்ளது.

‘உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு’

என்கிறார் வள்ளுவர். உதவி என்பதும் மனிதாபிமான அடிப்படையில் உடனடி உதவியாக இருக்க வேண்டும். காலத்தே செய்தால்தான் அது உதவி. (மேசையைத் தட்டும் ஒலி) இதனைத்தான் தமிழக மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்த எண்ணத்தை ஒன்றிய அரசுக்குச் சொல்லக்கூடிய வகையில் ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்புவது காலத்தினுடைய கட்டளை என்று அரசு கருதுகிறது. அதனடிப்படையில், கீழ்க்காணும் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 ஏப்ரல் 29

தீர்மானம்

"இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிடும்பொருட்டு, தமிழ்நாடு அரசு அவர்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, பால் பொருட்கள் முதலிய அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கக்கூடிய மருந்துகள் ஆகியவற்றை அனுப்பி வைக்கத் தயாராக உள்ளது என்றும்; இதற்கு ஒன்றிய அரசு தேவையான அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஒன்றிய அரசிற்கு ஏற்கெனவே மாநில அரசு கடிதம் எழுதியிருக்கிறது. எனினும், இதுகுறித்து ஒன்றிய அரசிடமிருந்து எந்தவிதமான தெளிவான பதிலும் இதுவரை பெறப்படாத நிலை உள்ளது.

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகி இருக்கக்கூடிய மக்களுக்கு உதவக்கூடிய வகையில், உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து, உரிய அனுமதிகளை வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசினை இப்பேரவை வலியுறுத்துகிறது."

இந்தத் தீர்மானத்தைக் கட்சி எல்லைகளைக் கடந்து, கருணை உள்ளத்தோடு அனைவரும் ஒருமனதாக ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள இத்தீர்மானத்தை ஆதரிக்கின்றேன். இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கின்றது. தமிழ்நாடு அரசு இலங்கை மக்களுக்கு மனிதாபிமான நிலையில் உதவும்வகையில், தேவையான அரிசி, பருப்பு, பால் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் ஆகியவற்றை அனுப்பி வைப்பதற்குத் தயாராக உள்ளது என்றும், மத்திய அரசு தேவையான அனுமதியை வழங்க வேண்டும் என்றும், மத்திய அரசிடம் அனுமதி கேட்டும் எந்தவிதமான பதிலும் இல்லையென்ற நிலை உள்ளது என்றும்

2022 ஏப்ரல் 29] [திரு. மு. ஜெகன் மூர்த்தி]

குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மக்களுக்கு ஏற்கெனவே மத்திய அரசு நிதி உதவியும், டீசல், பெட்ரோல் போன்று பொருள் உதவிகளையும் வழங்கியதைப்போல், தமிழ்நாடு அரசும் இலங்கை மக்களுக்கு உதவி செய்வதற்கு முன்வந்துள்ளது. ஆகவே, தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, இலங்கையில் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டு தவிக்கும் மக்களுக்கு உதவும் வகையில், உயிர் காக்கும் மருந்து, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைத் தமிழ்நாட்டிலிருந்து உடனடியாக அனுப்பி வைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து, உரிய அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்தியுள்ளதை புரட்சி பாரதம் பாராட்டுகின்றது; மாண்புமிகு தமிழக முதல்வர் முன்மொழிந்த இத்தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தீவில் வாழ்கின்ற தமிழின மக்களும், மலையகத் தமிழர்களும் மிகப் பெரிய துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகியிருக்கிறார்கள். இந்தச் சூழலை அறிந்துகொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு உதவ வேண்டும் என்கிற அடிப்படையில் ஒரு நல்ல முயற்சியை மேற்கொண்டு ஒன்றிய அரசிற்கு அதற்காக கடிதம் எழுதி, இதுவரையில் அனுமதி கிடைக்காத ஒரு சூழலில் மீண்டும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, ஒன்றிய அரசுக்கு உரிய அழுத்தத்தைத் தந்து, இன்றைக்கு 40,000 டன் அரிசி, 137 உயிர்காக்கும் மருந்து பொருட்கள், 15 கோடி ரூபாய் மதிப்பில் பால் பவுடர் என்று 123 கோடி ரூபாய் மதிப்பிலான இப்பொருட்களை இலங்கைக்கு அனுப்புகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த வேளையில் ஒரு வேண்டுகோளையும் முன்வைக்கிறேன். போரினால் பாதிப்பிற்குள்ளான தமிழின மக்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும் நாம் அனுப்புவதில் ஓரளவிற்கு ஒரு நியாயமான பங்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். கடந்த காலங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முயற்சியால் அனுப்பப்பட்டதை பௌத்த சிங்களப் பேரினவாத அரசு முற்றிலுமாகத் தனதாக்கிக் கொண்டது. குறிப்பாக, தமிழர்கள் முழுக்க, முழுக்க வாழ்கின்ற திரிகோணமலை, வவுனியா, அம்பாறை, கிளிநொச்சி, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில்

[திரு. தி. வேல்முருகன்] [2022 ஏப்ரல் 29

அவர்கள் பசியாலும், பட்டினியாலும் வாடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளையும், பாஸ்பரஸ் குண்டுகளையும் ஏவி, நமது இன மக்களை அழித்துவிட்ட சிங்கள பௌத்த பேரின அரசு, இந்தத் தருணத்தில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி, தவித்துக்கொண்டிருக்கிறது. ** இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அந்த வார்த்தைகள் எல்லாம் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீர்மானத்தின்மீது பேசுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னவற்றில் என்ன தவறு இருக்கிறது? ஈழத்தில் இனப் படுகொலை நடந்தது, அதனைப் பதிவு செய்வதில் தவறு ஒன்றும் இல்லையே? அப்படிப்பட்ட படுகொலை நடந்தபோது, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது அரசு, மக்களுக்கு கடந்த காலத்தில் உதவியதுபோல், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்கள், தமிழ் ஈழ மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து வந்த மக்களுக்கு 300 கோடி ரூபாய்க்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி, ஓட்டுப்போடுகின்ற உரிமை, இரண்டாவதாக இரட்டைக் குடியுரிமை தவிர்த்து, ஏனைய இந்தியக் குடிமக்களுக்குக் கிடைக்கின்ற அனைத்து உதவிகளையும் செய்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி கூறி, இப்படி ஒரு முயற்சி எடுத்திருந்தும், மத்திய, ஒன்றிய அரசு பாராமுகத்தோடு தமிழர்களை நடத்துவதை நான் இந்த நேரத்தில் வன்மையாகக் கண்டித்து, இந்த அரசினர் தனித் தீர்மானத்தை மனதார வரவேற்று, பாராட்டி அமைகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு,மனிதாபிமான அடிப்படையில் அறிவிக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்பு. தமிழகத்தில் நிதிநிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், நமக்கு அருகில் இருக்கின்ற நாட்டு மக்கள் துன்பப்படக் கூடாது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 29] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

என்ற நிலையில் இந்த அறிவிப்பு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

நண்பகல் 12–00

இலங்கைத் தமிழர்கள் என்ற சுயநலமில்லாமல், இலங்கை மக்கள் என்று குறிப்பிட்டு, இந்த அறிவிப்பைச் செய்திருக்கின்றார். அப்படிப்பட்ட மனிதாபிமானத்திற்குச் சொந்தக்காரர். கடந்த காலங்களில், இலங்கையில் இருந்த ஆட்சியாளர்களால், தமிழர்கள் துன்புறுத்தப்பட்டாலும், இன்றைக்கு மொத்த மக்களுக்குமான உதவியாக இந்த அறிவிப்பை அறிவித்திருக்கின்றார். இந்த நேரத்திலே வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் உள்ள அரசு, இந்த அரசு என்று அவர் சொன்னதை நான் ஞாபகப்படுத்துகிறேன். ஒன்றிய அரசைப் பொறுத்தவரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதத்திற்கு அனுமதி தரவில்லை என்பது வேதனை அளிக்கிறது. உக்ரைன் நாட்டிலிருந்து காப்பாற்றப்பட்ட தமிழர்களுக்கான உதவிகளைச் செய்து வரவேற்றபோதுகூட தமிழக அரசினுடைய அந்தச் செயல்பாடுகள் கொச்சைப்படுத்தப்பட்டன என்பதை நான் இங்கே குறிப்பிடுகின்றேன். எனவே, தமிழகத்தினுடைய இந்தச் செயல்பாடுகளுக்கு, முட்டுக்கட்டை போடுகின்ற விதத்திலே ஒன்றிய அரசு செயல்படுவது சரியல்ல. இதற்குக்கூட சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி இந்த உதவிகளைச் செய்ய, அனுமதியைப் பெற வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த மனிதாபிமான அடிப்படையிலான அத்துணை அறிவிப்புகளையும் கொங்கு நாடு தேசிய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைதினம், கொளத்தூரில் நடைபெற்ற ரமலான் நிகழ்ச்சி ஒன்றிலே பங்குகொண்ட மாண்புமிகு முதலமைச்சர், மனித நேயம்தான் திராவிட மாடல் ஆட்சி என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூற்றுக்கொப்ப இன்றைக்கு இலங்கைத் தீவில் மிகப் பெரிய அளவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கடல் சார்ந்த இலங்கைத் தீவு இன்றைக்கு கண்ணீரால் சூழப்பட்டிருக்கின்றது என்ற ஒரு நிலையில், மனிதாபிமான ரீதியில் இலங்கையில் வாழக்கூடிய ஈழத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், தமிழ் பேசும்*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2022 ஏப்ரல் 29

முஸ்லிம்கள், சிங்களவர்கள் என அனைவருக்கும் 80 கோடி ரூபாய் மதிப்பிலே 40,000 டன் அரிசி; 28 கோடி ரூபாய் மதிப்பிலே 137 வகை மருந்துகள்; 15 கோடி ரூபாய் மதிப்பிலே 500 டன் பால் பவுடர்; ஆக மொத்தம் 123 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை அங்கே அனுப்புவதற்கான அனுமதியை ஒன்றிய அரசிடம் கேட்டு இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த மார்ச் 31 ஆம் தேதி டெல்லிக்குச் சென்றபோது இந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்கள். மீண்டும் ஏப்ரல் 15 ஆம் தேதி வெளிவிவகாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலும் வலியுறுத்தினார்கள். இந்த நிலையில், தமிழக மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்றார் மகாகவி பாரதியார். அந்த அடிப்படையில் நமக்கு அருகில் இருக்கக்கூடிய ஒரு நாடு, நம்முடைய தொப்புள்கொடி உறவுகள் வாழக்கூடிய நாடு, சிங்களப் பேரினத்தின் மொழியினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அனைவருக்குமே மனிதாபிமான உதவிகள் வேண்டுமென்று சொல்கின்றபோது, தமிழர்களுடைய நாகரிகம், பண்பாடு எப்படி இருக்கிறது என்று பறைசாற்றக்கூடிய, தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றவுள்ள இந்தத் தீர்மானத்திற்கு உடனடியாக ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். "நெருப்பும், புகையும் இல்லாமல் எரிகின்ற அடுப்பு எது என்று கேட்டால், அது பட்டினியால் வாடுகின்ற ஏழைகளின் வயிறுதான்" என்பதை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம் அருகில் உள்ள சிங்களத் தீவில் வாழ்கின்ற நம் தொப்புள்கொடி உறவுகள் மட்டுமின்றி, அங்கேயிருக்கின்ற அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில், அரிசி, பருப்பு, மருந்துகள், பால் பவுடர் போன்ற பல்வேறு பொருட்களை அனுப்ப முன்வந்து, அனுப்புவோம் என்று கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானம், வரவேற்கக்கூடிய, பாராட்டக்கூடிய தீர்மானமாகும். இதற்கு பதிலேதும் சொல்லாமல்

2022 ஏப்ரல் 29] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

இருக்கின்ற ஒன்றிய அரசின் நிலையைப் பார்க்கும்போது மிகவும் கவலை அளிப்பதாக இருக்கிறது. அதே ஒன்றிய அரசிற்குச் சாதகமாக இங்கே இருப்பவர்கள் அந்த அரசை வலியுறுத்த வேண்டும்; முதன்மை அமைச்சரிடம் வலியுறுத்த வேண்டும்; தமிழக அரசு நம்முடைய மாண்புமிகு முதல்வர், மனிதநேய பண்பாளர் எடுக்கின்ற முயற்சிகளுக்குத் துணைபுரிய வேண்டும். எனவே, நீங்கள் வலியுறுத்த வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுமனதோடு வரவேற்கிறது. மிகப் பெரிய அளவில், பேரினவாத கொள்கையினால் இலங்கை நாடும், அந்த நாட்டு மக்களும் மிகப் பெரிய அளவில் இன்றைக்கு நிற்கதியாகியிருக்கிறார்கள். அதுபோல் அந்நாட்டில் பன்னாட்டு குழுமத்தினுடைய முதலாளிகள் கடைபிடித்திருக்கின்ற உலகமயமாக்கல் பொருளாதாரக் கொள்கையினால் அந்த நாட்டின் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் சீரழிந்துபோய் உள்ளது. எனவே, நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகத் தாயுள்ளத்தோடு, கருணையுள்ளத்தோடு ஒன்றிய அரசிற்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்திற்கு ஒன்றிய அரசு உரிய மதிப்பளித்திருக்க வேண்டும். காரணம், தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சருடைய இந்த நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டை போடுவது என்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு மிகப் பெரிய பேராபத்தை உருவாக்கும். அத்தகைய செயலில் ஒன்றிய அரசு என்றைக்கும் ஈடுபட்டுவிடக் கூடாது. எனவேதான், நமது மாநில அரசாங்கம், நமது முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அத்தியாவசியமான உணவுப் பொருட்களையும், உயிர்காக்கும் மருந்து பொருட்களையும் அனுப்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற இந்த நடவடிக்கைகளை ஆதரிப்பதோடு சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் நாமும் ஒருமாத

[திரு. K. மாரிமுத்து] [2022 ஏப்ரல் 29

ஊதியத்தை வழங்குவதாக அறிவித்திருந்தாலும், அதையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தத் தயாராக இருக்கிறோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பணிவோடு தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரால் சூழப்பட்டுள்ள இலங்கை, தற்போது கண்ணீரால் சூழப்பட்டுள்ளது என்று நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு உதிர்த்திருக்கின்ற இந்த வார்த்தைகளோடு என்னுடைய உணர்வினையும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கை மக்கள் தவிக்கின்ற தவிப்பினை ஊடகங்கள் வாயிலாக, பத்திரிகை வாயிலாக நாம் புரிந்துகொள்கிறோம்; அறிந்துகொள்கிறோம். அதற்காக நம்முடைய உள்ளம் துடிக்கின்றது. ஆகவே, இலங்கை மக்களுக்கு மனிதாபிமானத்தோடு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நாட்டினுடைய பிரதமரை நம்முடைய முதல்வர் அவர்கள் நேரிலே சந்தித்து இதுகுறித்துப் பேசியும், நினைவூட்டல் கடிதங்கள் எழுதியும், தமிழக மக்களுடைய உணர்வினை மத்திய அரசு கடந்த காலங்களில் எப்படி புரிந்துகொள்ளாமல் செயல்பட்டதோ, அதேபோல இலங்கை மக்களுக்கு, துடித்துக்கொண்டிருக்கின்ற இலங்கை மக்களுக்கு, பசியால் வாடுகின்ற இலங்கை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற அந்த உணர்வையும் மத்திய அரசு புரிந்துகொள்ளாமல் இருப்பது என்பது வேடிக்கையாக இருக்கின்றது; வேதனையாக இருக்கின்றது. ஆகவே, இலங்கை மக்களுக்கு உதவ வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனிதாபிமானத்தோடு நான் வரவேற்கிறேன். ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

***திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009–ல் ஈழ மக்கள் அழித்தொழிக்கப்பட்டபோது உலகமே அதனை வேடிக்கை பார்த்த சூழலில், அங்கே

2022 ஏப்ரல் 29] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

உள்ள மக்கள் என்ன நிலைக்கு ஆளானார்கள் என்பதை உலகத்தின் பார்வைக்கு யாராலும் எடுத்து வர முடியவில்லை; ஊடகவியலாளர்கள்கூட அனுமதிக்கப்படவில்லை; சர்வதேச ஊடகங்கள் அனுமதிக்கப்படாத சூழலில் எந்தப் பன்னாட்டுப் பிரதிநிதிகளும் அங்கு போய் உண்மை என்ன என்று அறிந்து வெளியே சொல்லமுடியாத ஒரு சூழலில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அனுப்பி, அங்கே போய் உண்மையைத் தெரிந்துகொண்டு உலகுக்குச் சொல்லுங்கள் என்று பணித்தார்கள். அதனடிப்படையில், எங்களுடைய தலைவர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அங்கே போய் மக்களைச் சந்தித்து, குற்றுயிரும், குலையுயிருமாக இருந்த அந்த மக்களைச் சந்தித்து அவர்களுடைய துயரங்களை உலகுக்குச் சொன்னார்கள் அன்றைக்கு. அந்த வழித்தடத்தில் பயணிக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அங்கு இருக்கக்கூடிய மக்களின் துயரை அறிந்து அவர்கள் யாராக இருந்தாலும், தமிழ் மக்கள் என்று மட்டும் இல்லை, ஒட்டுமொத்த மக்களுக்கும் உதவுவோம் என்று சொல்லி, அரிசியை, பருப்பை, மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கு ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள்.

இங்கே அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். இப்போது நாம் அனுப்புவது, இந்தத் திராவிட மாடல் அரசு அனுப்ப முயல்வது, அரிசி, பருப்பு, மருந்துப் பொருட்கள் அல்ல.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழந்தைகளுக்கான பால் பவுடர்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *குழந்தைகளுக்கான பால் பவுடர் மட்டுமல்ல, பன்முகத்தன்மை, மனிதநேயம், மனித உரிமை என்கின்ற இந்தத் திராவிட மாடலைத்தான் நாம் அனுப்புகின்றோம். இன்றைக்கு இவை இலங்கைக்கு தேவைப்படுகின்றன. இலங்கைக்கு இன்று வெறும் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மட்டும் தேவைப்படவில்லை, இந்த நிலைக்கு அந்த நாடு ஆளானதற்கு அடிப்படையே பன்முகத்தன்மை, மனிதநேயம், மனித உரிமையை இழந்து நின்றதுதான் காரணம். இன்றைக்கு நாம் அதைத்தான் அனுப்ப வேண்டும். அதைத்தான் இதன் வழியாக அனுப்புகின்றோம்.*

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [*2022 ஏப்ரல் 29*

கர்நாடகத்தில் இன்றைக்கு என்ன நடக்கிறது என்று பார்க்கின்றோம். அங்கே இருக்கின்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றன என்று சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? இலங்கையில் என்ன நிலையோ அதேதான் அங்கேயும். எங்கே வகுப்புவாதமும், வன்முறையும் தலைதூக்குகிறதோ, அங்கே மக்கள் நிம்மதி இழப்பார்கள். உலகத்திற்கே இன்றைக்கு role model *ஆக தமிழ்நாடு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே எல்லா மக்களும் இணக்கத்தோடு வாழ்கிறோம். அமைதியாக வாழ்கிறோம். இப்படிப்பட்ட சூழல் இன்றைக்கு இலங்கைக்கும் பாடமாக இருக்கின்றது. நம்முடைய நாட்டிலும் பல மாநிலங்களுக்குப் பாடமாக இருக்கின்றது. எனவே, அந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம்.*

குறிப்பாக, அங்கே பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களில் அதிக பாதிப்பைச் சந்தித்திருக்கின்ற மக்கள், தமிழ் மக்கள். அதைத்தான் அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இந்திய அரசின் சார்பில் கொடுக்கப்பட்ட பல உதவிகள் தமிழ் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற நிலை இருக்கிறது. எனவே, இந்த உதவி கட்டாயமாக நம்முடைய தமிழ் மக்களுக்குப் போய்ச் சேருவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் ஊதியத்திலிருந்து 1 மாத ஊதியத்தை பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு வழங்குவதற்குத் தொடக்கமாக, எங்களுடைய தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் அதற்கு நாங்கள் முன்வருகின்றோம். இதை ஒட்டுமொத்த அரசின் அறிவிப்பாக செய்வதற்கு முன்வர வேண்டுமென்கின்ற வேண்டுகோளை விடுத்து, இந்தத் தீர்மானத்தை எனது கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கு அப்படித்தானே! மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

***திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை ஆதரித்து பேசுவதற்கு முன்பு, மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், ஏற்கெனவே ஆயிரக்கணக்கான வீடுகளை தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கும், இந்திய வம்சாவழியினருக்கும்,*

2022 ஏப்ரல் 29] [திரு. நயினார் நாகேந்திரன்]

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழின மக்களுக்கும் கட்டிக்கொடுத்தும், டீசல் போன்ற பல்வேறு பொருட்களை அனுப்பியுள்ளார். பொருளாதார ரீதியாக இலங்கைக்கு உதவ மற்ற நாடுகள் முன்வராத நிலையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நிறைய திட்டங்களை இலங்கைக்குத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை ஒட்டுமொத்தமாக நாம் எல்லோரும் ஆதரிக்க வேண்டிய இந்தச் சூழ்நிலையில், நிறைய பேர் ஒன்றியம் என்ற வார்த்தையோடு ஒன்றிப்போய்விட்டார்கள். ஆனால், திரு. வேல்முருகன் அவர்கள் பேசும்போது, தீர்மானத்தை ஆதரித்து பேசுகிறோம் என்று சொல்லி, 'மத்திய அரசை கண்டிக்கிறோம்' என்ற வார்த்தைகளைக் கூறினார். இந்தச் சூழ்நிலையில், அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் பதியப்பட வேண்டுமா என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பரிசீலனை செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் இன்னொன்று, உக்ரைனிலிருந்து மாணவர்கள் வருகை தந்தபோது, மத்திய அரசு தடையாக இருந்தது என்று திரு. ஈஸ்வரன் அவர்கள் சொன்னார். பொதுவாக மாநில அரசு நேரடியாகத் தலையிட முடியாது. தவறான செய்தியைக் கூறியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த கோரிக்கைக்கு மத்திய அரசு காலதாமதமாக செயல்பட்டது என்ற அந்தக் கருத்துக்குத்தானே தவிர,— நீங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: தீர்மானத்தை ஒட்டுமொத்தமாக இந்த அவையில் நாம் நிறைவேற்றப்போகிறோம். அதில் 'கண்டித்து' என்கின்ற வார்த்தையும், 'உக்ரைன் நிகழ்வு குறித்த சம்பந்தமில்லாத வார்த்தைகளும் இடம் பெற வேண்டுமா? பொதுவாக வெளிநாட்டுப் பிரச்சினை எதுவாக இருந்தாலும் மத்திய அரசு தலையிட வேண்டும். வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் உதவியுடன்தான் நாம் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியும்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 123 கோடி ரூபாய்க்கு பொருட்களை இலங்கை மக்களுக்கு அனுப்புவதற்குத்

[திரு. நயினார் நாகேந்திரன்] [2022 ஏப்ரல் 29

தயாராக இருக்கிறார்கள். 500 கோடி ரூபாய்க்கு பொருட்களை அனுப்பினாலும் நாங்களும் அதற்குத் தயாராக இருக்கிறோம். மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் நாங்களும் தனியாகப் பரிந்துரை செய்து, நிச்சயமாக தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல், இலங்கையில் வாழ்கின்ற ஒட்டுமொத்த மனித இனத்திற்கே பொருட்களை அனுப்ப இருப்பது என்பது வரவேற்கக்கூடிய விஷயம். அதிலும் இதுபோன்று ஒட்டுமொத்தமாக ஒரு தீர்மானம் போடும்போது, இந்த வார்த்தைகள் சபையில் இடம் பெற வேண்டாம் என்பது எங்களுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தீர்மானத்திற்கு எதிராகவோ, மத்திய அரசிற்கு எதிராகவோ ஒன்றும் சொல்லவில்லை. காலதாமதத்திற்காக சொன்னார்கள். நீங்கள் காலதாமதம் இல்லாமல் உரையை முடித்துக்கொடுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: இப்போதுகூட திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், ஒரு மாத ஊதியத்தைக் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். நாங்களும், பாரதிய ஜனதா கட்சியும், ஒரு மாத ஊதியத்தை தமிழக அரசுக்கு வழங்க முடிவெடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நாங்களும் ஆதரிக்கின்றோம்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்தில் இருக்கின்ற, தொப்புள்கொடி உறவுகள் வாழ்கின்ற ஈழத்தில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அங்கே காலங்காலமாக, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, உயிரை, உடைமைகளை இழந்து, முகாம்களில் வாழ்ந்த தமிழர்களின் கொடுமையோடு, இப்பொழுது அந்த நாட்டைச் சார்ந்த ஒட்டுமொத்த இலங்கை மக்களும் பசியும் பட்டினியுமாக வாழ்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து, தொப்புள்கொடி உறவுகளுக்காகக் கண்ணீர் வடிக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் ஒரு தனித்

2022 ஏப்ரல் 29] [திரு. ஜி.கே. மணி]

தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் இருக்கின்ற நான் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும், உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களும் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார். இன்று, "பசித்த வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்" என்கிறார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அங்கே பசியும், பட்டினியுமாக இருக்கிறார்கள். அந்தப் பசியைப் போக்குவதற்கு உணவளிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய வகையில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு மிகப் பெரிய உதவித் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இலங்கையிலிருந்து பசியோடு வாடுகின்ற நம்முடைய தொப்புள்கொடி உறவுகள் இதுவரை 75 பேர் அகதிகளாக வந்திருக்கிறார்கள் என்று செய்திகள் வந்திருக்கின்றன; அவர்கள் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்திருக்கிறது. நேற்று இரண்டு இளைஞர்கள் தொண்டி பகுதிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களை இங்குள்ள கடலோரக் காவல் படை கைது செய்திருக்கிறது என்ற செய்தியும் வந்திருக்கிறது. இவையெல்லாம் நமக்கு வேதனையளிக்கின்ற செய்திகளாக இருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், இன்றைய நடுவண் அரசு இலங்கை நாட்டிற்கு நிறைய உதவிகளைச் செய்துகொண்டிருக்கிறது. அப்படி உதவிகளைச் செய்துகொண்டிருக்கும் இந்திய அரசு, அங்கே பசியோடும், பட்டினியோடும் வாடிக்கொண்டிருக்கிறார்களே, அந்த மக்களுக்குத் தமிழக அரசு வழங்குகின்ற, தமிழ்நாட்டு மக்கள் வழங்குகின்ற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சார்பில் வழங்குகின்ற இந்த உதவியை உடனடியாக அனுமதிக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் சார்பில் நானும் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதற்கு முன்பு 1980 ஆம் ஆண்டு இதேபோன்ற பொருளாதார நெருக்கடி இலங்கையில் ஏற்பட்டது. அன்றைய நடுவண் அரசு உடனடியாக உதவிகளை வழங்கியது. உதவி செய்த நேரத்தில், அதைப் பெற்றுக்கொண்ட இலங்கை அரசு, அந்த உதவிகளை சிங்கள இன மக்களுக்குக் கொடுத்துவிட்டு, தமிழர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில், நம்முடைய அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று,

[திரு. ஜி.கே. மணி] [2022 ஏப்ரல் 29

இந்திய அரசு உடனடியாக ஹெலிகாப்டர் மற்றும் விமானம் மூலமாக தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகளிலெல்லாம் உணவுப் பொட்டலங்களையும், உணவுப் பொருட்களையும் கொடுத்தது. அதைப்போல, 2009 ஆம் ஆண்டு மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டது. அங்கு போர் நடைபெற்ற நேரத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. மருந்துகள் கிடைக்கவில்லை. எல்லோரும் பாதிக்கப்பட்டிருந்த நேரம். அப்பொழுது எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் வைத்து, ஓர் அறிக்கையை அனுப்பினார்கள். உடனடியாக எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களை நேரில் சந்தித்துப் பேசுங்கள் என்று என்னிடம் சொன்னார்கள். நானும் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்துப் பேசினேன். பேசியவுடன், அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிவிப்புகளைக் கொடுத்தார்கள். எங்கு பார்த்தாலும், தமிழர்கள் அரிசி, பருப்பு, மருந்துப் பொருட்கள் எனக் கொண்டுவந்து கொட்டினார்கள். அவற்றையெல்லாம் சேர்த்து அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு அனுப்பி வைத்தார்கள். அதே நிலையை இன்றும் நாம் பார்க்கிறோம்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்ற ஒரு நல்ல திருக்குறளைச் சொல்லி, "வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்" என்பதற்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அரசு எல்லா உதவிகளையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மத்திய அரசுக்கு வேண்டுகோளாக வைத்திருக்கிற இந்தத் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நெஞ்சார வரவேற்கிறேன். மத்திய அரசு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கிருந்து வந்தவர்களைக் கைது செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது ஒரு formality. Passport, Visa இல்லாமல் வேறொரு நாட்டிலிருந்து இங்கு வந்தால் முறைப்படி தமிழக காவல் துறையினர் அவர்களை அழைத்து வந்து, வழக்குப் பதிவு செய்து,

2022 ஏப்ரல் 29] [பேரவைத் தலைவர்]

முறைப்படி அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்றுச் செய்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) அவர்களைக் கைது செய்திருக்கிறோம் என்று சொன்னதில் தவறு வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

பிற்பகல் 12–20

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கம் வழிமொழிகிறது. இது ஒரு சிறப்பான தீர்மானம். இந்தத் தீர்மானத்தின் மூலமாக மனிதநேயத்தின் மாண்புகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பார்க்க முடிகிறது. ஏற்கெனவே ஆகஸ்ட் 27 ஆம் தேதி இலங்கைத் தமிழர்கள் முகாம்களில் வசிக்கின்ற ஈழத் தமிழர்களுக்குப் பல அறிவிப்புகளைச் செய்திருக்கிறார். இப்போது கடல் கடந்து சிரமத்தில் இருக்கும் நம்முடைய தொப்புள்கொடி உறவுகளுக்கு மருந்து, உணவு போன்ற பொருட்களை அனுப்பி வைப்பது குறித்த அறிவிப்புகள் உண்மையிலேயே அவர்களுக்கு மிகவும் ஆதரவாக இருக்கும். ஒன்றிய அரசு, இனிமேலும் தாமதப்படுத்தாமல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை, இந்தச் சபை வழிமொழிந்த தீர்மானத்திற்கு உடனே இசைவு தர வேண்டும். அந்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு முன்வர வேண்டும். மாண்புமிகு பிரதமர் அவர்கள் எப்பொழுதும் விவேகானந்தரைப்பற்றி அதிகமாக பேசுவதை நான் அறிந்தேன். நம்முடைய அருமைச் சகோதரர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களும் விவேகானந்தரை உள்வாங்கியவர். விவேகானந்தர் சொன்ன கருத்துகளைப் பலமுறை பேசியிருக்கிறார்கள். விவேகானந்தர் என்ன சொன்னார்? அவர் வரலட்சுமி விரதமோ, நவராத்திரி விரதமோ, எந்த விரதமோ இருக்க வேண்டாம். விவேகானந்தர் திரும்பத்திரும்ப 3 விரதங்களைக் குறித்துச் சொல்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் subject–க்கு வந்துவிடுங்கள்.

[*2022 ஏப்ரல் 29*

திரு. கு. செல்வபெருந்தகை: பசித்தவர்களுக்கு உணவு கொடு; நோயுற்றவனுக்கு மருந்து கொடு; கல்வியில்லாதவர்களுக்குக் கல்வி கொடு என்று சொன்னார். ஆனால், அதற்கு ஒன்றிய அரசு இதுவரை செவி சாய்க்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவேகானந்தர் சொன்னதை, பசித்தவருக்கு உணவு கொடுக்கிறார். நோயுற்றவருக்கு மருந்து கொடுக்கிறார். கல்வியற்றவர்களுக்கு இல்லம் தேடி கல்வியைக் கொடுக்கிறார். ஆக, விவேகானந்தர் கூற்றை யாரெல்லாம் சொல்கிறார்களோ, விவேகானந்தரைப்பற்றி யாரெல்லாம் பேசுகிறார்களோ அவர்கள் நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராக இல்லை. ஆனால், எல்லா மதமும் சம்மதம். எல்லோரும் அமைதியாக வாழ வேண்டுமென்ற அடிப்படையிலே, விவேகானந்தர் சொல்லிய கூற்றை, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார். ஆகவே, இனி வருங்காலங்களில் தாமதப்படுத்தாமல் ஒன்றிய அரசு இதற்கு இசைவு தர வேண்டும். ஏற்கெனவே 1987 ஆம் ஆண்டு திரு. ஜெயவர்த்தனா, தலைவர் ராஜீவ் காந்தி அவர்களிடையே உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. அந்த 13–வது பிரிவை நடைமுறைப்படுத்தி இருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. ஆகவே, இனி வருங்காலங்களில் ஒன்றிய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் சொல்வதற்கு செவிசாய்த்து கேட்டு, இசைவு தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக வழிமொழிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் தனித் தீர்மானத்தின்மீது எங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கின்றோம். பொருளாதார வீழ்ச்சியில் கடும் நெருக்கடிக்கு இலங்கை உள்ளாகியிருக்கின்றது. விலைவாசி விண்ணைத் தொடுகின்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. நாணயத்தின் மதிப்பு சரிந்திருக்கின்றது. அமெரிக்க டாலர்களில் நடக்கும் இறக்குமதிகள் முடங்கியிருக்கின்றன. இறக்குமதியை நம்பியிருக்கும் தொழில் துறைகள் திணறிக் கொண்டிருக்கின்றன. உலகளவிலே கொரோனா பரவல் காரணமாக 2020 மார்ச் மாதம் முதல் இலங்கையில் சுற்றுலா, தேயிலை உற்பத்தி மற்றும் ஆடை தயாரிப்பு ஆகிய மூன்றும் முற்றிலுமாகப் பாதிப்புகளுக்குள்ளாகி இருக்கின்றன.இதனால்இலங்கைக்குவந்துகொண்டிருந்தஅன்னியச்

2022 ஏப்ரல் 29] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

செலாவணி வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டு படிப்படியாகப் பொருளாதாரப் பின்னடைவையும் சந்திக்கத் துவங்கியுள்ளது. தொடர்ந்து இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணைத் தொடுகின்ற அளவிற்கு உயர்ந்துள்ளதால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு நிலவுவதால் அந்நாட்டில் 90 சதவிகித உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. வீடுகளுக்குத் தேவையான கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடும் அதிகரித்துள்ளது. இதனால் பொது மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் இறக்குமதியை நம்பியிருப்பதால் அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, கோழித் தீவனம்கூட அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. பால், சர்க்கரை, முட்டை, பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு என முக்கியமான பொருட்கள் அனைத்தும் விலை உயர்ந்திருக்கின்றன.

நாட்டின் முக்கியமான மின் உற்பத்தி நிலையங்கள் டீசலில் இயங்கக்கூடியவை என்பதால் அவையும் உற்பத்தியைக் குறைத்திருக்கின்றன; மூடப்பட்டிருக்கின்றன. இதனால் அங்கும் மக்கள் மின் தடையால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நிலக்கரி வாங்கப் பணமில்லாததால் இலங்கையில் தினமும் பல மணி நேரம் மின்வெட்டு அமலில் உள்ளது. பெட்ரோல், டீசல் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. வாகனங்கள் இயக்கப்படாததால் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு, இலவச மருந்து சேவை வழங்கும் மருத்துவமனைகளில் திடீர் ஆள் பற்றாக்குறையும், மருந்துகள் பற்றாக்குறையும் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கைத் தமிழர்களும் இதில் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளதால் பொருளாதார நெருக்கடி தொடக்கத்திலிருந்தே நூற்றுக்கணக்கானோர் அகதிகளாக தமிழகம் நோக்கி வரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிற்பகல் 12–25

மாண்புமிகு அம்மா அவர்கள் 2008 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் அரசமைப்புச் சட்டம் 32–ன்படி கச்சத்தீவை மீட்க வழக்கு எண் 561/2008–ஐ தொடர்ந்தார். இதற்கு அப்போதைய மத்திய அரசு, கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமானது என்று

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2022 ஏப்ரல் 29

எதிர்மனு தாக்கல் செய்திருந்தது. உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் வருடம் ஜூன் மாதம் 9 ஆம் தேதி இதே சட்டமன்றத்தில் கச்சத் தீவு வழக்கில் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையும் இந்த வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதன் அடிப்படையில், கச்சத்தீவு நமக்குச் சொந்தமானது என்பதற்காக 60 பக்க ஆதாரங்கள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு இன்றும் நிலுவையில் உள்ளது. தற்போது இலங்கை நாடு பொருளாதார நெருக்கடியில் தவித்துவரும் நிலையில் அந்நாட்டு மக்களைக் காப்பாற்ற மத்திய அரசு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. அவர்களுக்குத் தேவையான எரிபொருளுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. கச்சத்தீவு தமிழகத்திற்குச் சொந்தமாக இருந்தபோது தமிழக மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித்தார்கள். கச்சத்தீவில் தங்கள் மீன்பிடி வலையை உலர்த்துவதற்கும், ஓய்வெடுப்பதற்கும் பயன்படுத்தி வந்தனர். இந்தச் சூழ்நிலையில் நமக்குச் சொந்தமான கச்சத்தீவை மீட்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை விரைந்து நடத்தி, கச்சத்தீவை மீட்டு தமிழக மீனவர்கள் நலன் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

மேலும், இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென்ற நமது கோரிக்கையும் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இதையும் இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசிடம் வலியுறுத்தி, இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை பெற்றுத் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழக அரசின் சார்பில், அரிசி, பருப்பு, பால் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலங்கை மக்களுக்கு வழங்குவதற்கு மத்திய அரசு உரிய அனுமதி உடனடியாக வழங்க வேண்டுமென்றும், இலங்கைவாழ் மக்களுக்குத் தேவையான உதவிகளைத் தொடர்ந்து வழங்கிட வேண்டுமென்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வலியுறுத்தி அரசு கொண்டுவந்த தனித் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆதரிக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இலங்கை நாடு அனைத்து நிலைகளிலும், அனைத்துத் துறைகளிலும் மிகப் பெரிய ஒரு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து, அதன் அடிப்படையாக அங்கு வாழுகின்ற அனைத்து மக்களும் படுகின்ற துன்பங்கள், துயரங்களையெல்லாம் உலக நாடுகள் மிகவும் அனுதாபத்துடன் பார்க்கக்கூடிய ஒரு கெட்ட சூழ்நிலையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் மனித நேயத்தின் அடிப்படையாக, தமிழர்கள் மனித நேயத்திலே உலகத்திலே உயர்ந்தவர்கள் என்பதற்கு அடையாளமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அரசின் சார்பாக அங்கு வாழ்கின்ற மக்களுக்கு நிவாரண உதவியாக அளிக்கப்படுகின்ற 123 கோடி ரூபாய் நிதியில் நான் சார்ந்திருக்கின்ற குடும்பத்தின் சார்பாக 50 இலட்சம் ரூபாயை நிவாரண உதவியாகத் தருகிறேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருங்கடல்களால் சூழப்பட்டிருக்கின்ற இந்த பூமி பந்தினுடைய எந்த மூலையிலும் தமிழினம் பாதிக்கப்பட்டால் துடிக்கக்கூடிய உள்ளம் நம்முடைய தமிழ்நாட்டு மக்களின் உள்ளம்; நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உள்ளம். அவர்களுடைய இன்னலைப் போக்குவதற்காக உடனடியாக உதவிகளைச் செய்யக்கூடிய அளவில் நீளும் கரம், அவர்களுடைய கரம். அந்தவகையில் இந்தியதுணைக்கண்டத்தினுடையதென்கோடி முனையில் முன்நீராலும் சூழப்பட்டிருக்கக்கூடிய இலங்கைத் தீவு இன்றைக்குக் கண்ணீராலும் சூழப்பட்டிருக்கக்கூடிய நிலையில் அங்கேயிருக்கக்கூடிய தமிழினத்தினுடைய உரிமைக்காகவும், வாழ்வாதாரத்திற்காகவும் தொடர்ந்து குரல் எழுப்பிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இன்னும் சொல்லவேண்டுமென்றால் இலங்கைத் தமிழர்களுடைய நல வாழ்விற்காக, அவர்களுடைய உரிமைகளுக்காக ஆட்சிப் பொறுப்பையே இழந்த வரலாறு உடைய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. தங்கம் தென்னரசு] [*2022 ஏப்ரல் 29*

இன்றைக்கு ஒட்டுமொத்த இலங்கையும் பொருளாதார நெருக்கடியிலே சிக்கித் தவிக்கக்கூடிய சூழ்நிலை. நம்முடைய தாய்த் தமிழ் உறவுகளின் கண்ணீர்க் குரல் நாளும் நம்முடைய காதுகளிலே எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. அதேவேளையில், தங்களுடைய துயரினைத் துடைக்கக்கூடிய ஒரேயொரு நம்பிக்கைக்கீற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் ஒருவர்தான் என்று நம்பிக்கையோடு அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்க்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் தங்களுடைய இன்னலைக் களைய முடியும் என்று இங்கேயிருந்து அங்கே சென்றிருக்கக்கூடிய பத்திரிகையாளர்களிடத்திலே அவர்கள் கொடுக்கக்கூடிய பேட்டிகள், அங்கேயிருந்து வரக்கூடிய தலைவர்களுடைய கருத்துகளைப் பார்க்கும்போது நம்மால் நன்றாக அறிந்துகொள்ள முடிகிறது. அந்தச் சூழ்நிலையில் இலங்கை மண்ணில் வாழக்கூடிய தமிழ் மக்களுக்கு மாத்திரமல்லாமல், ஒட்டுமொத்த இலங்கைக்கும் நாம் உதவிட வேண்டுமென்ற அந்தக் குரல் இங்கே ஒலிக்கத் துவங்கி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களிடத்திலெல்லாம் கலந்துபேசி நாம் அளிக்கக்கூடிய உதவி ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் அளிக்க வேண்டுமென்ற அந்த முடிவினை மனிதாபிமானத்துடன் எடுத்திருக்கிறார்கள். மொழியால் நான் தமிழன்; நாட்டால் நான் இந்தியன்; மனிதநேயமிக்க உணர்வால் முதலில் நான் மனிதன் என்கின்ற உணர்வை பெற்றிருக்கக்கூடிய முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

மனோகரா திரைப்படத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு வசனம் எழுதியிருப்பார்கள்; "பரசுராமன் அவதாரம், மனோகரன் மனிதன்" என்று. அவருடைய படைப்பில் மனோகரன் மனிதனாக இருந்தான். அவருடைய படைப்பில் முகிழ்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மகோன்னதமான ஒரு மனிதனாகப் பரிமளித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான், அங்கேயிருக்கக்கூடிய மக்களுக்கு, மொழி உணர்வுகள், இன உணர்வுகளைத் தாண்டி, அது யாழ்ப்பாணமாக இருந்தாலும், மலையகமாக இருந்தாலும், கொழும்பாக இருந்தாலும், வடக்கு மாகாணமாக இருந்தாலும், வடகிழக்கு மாகாணமாக இருந்தாலும், மட்டக்களப்பாக

2022 ஏப்ரல் 29] *[திரு. தங்கம் தென்னரசு]*

இருந்தாலும், திரிகோணமலையாக இருந்தாலும், எந்தப் பகுதியாக இருந்தாலும், அவர்களுக்கு மாத்திரமல்ல, அந்தப் பூபாகத்தில் வசிக்கக்கூடிய அனைவருக்கும் உதவி செய்யக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு மனிதாபிமானத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கம்பர் சொன்னான், "கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று. இன்றைக்கு இலங்கை வேந்தன் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இலங்கையும் கலங்கி நிற்கின்றபோது, அவர்களுடைய கண்ணீர் துளிகளை துடைக்கக்கூடிய ஒரே கரமாக நீண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், ஒன்றிய அரசு எல்லாவிதமான உதவிகளையும் இலங்கைவாழ் மக்களுக்கு அளிக்கக்கூடிய வகையில், இந்தத் தீர்மானத்திற்கு வலு சேர்க்கக்கூடிய வகையில், அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, மனிதநேயமிக்க தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கக்கூடிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இங்கேயிருக்கக்கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை வரவேற்று, ஆதரித்து, இதை ஒருமனதாக நிறைவேற்றிட வேண்டுமென்ற அடிப்படையிலே பேசியதற்கு முதலில் என்னுடைய நன்றியை உங்கள் அத்தனைப் பேருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடும் இன்னலுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய இலங்கை நாட்டு மக்களுக்கு உதவிடும் நோக்கில், இன்று தமிழக அரசு அறிவித்துள்ள உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர்காக்கக்கூடிய மருந்துகள் அடங்கிய உதவி என்பது முதற்கட்டமாகத்தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை நாட்டு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 ஏப்ரல் 29

மக்களுக்கு இன்னும் உதவி தேவைப்படுமென்றால், அடுத்த கட்டமாக, உதவிகள் செய்வதற்குத் தமிழக அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் இந்த அவைக்குக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்கூட குறிப்பிட்டுச் சொன்னார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் உணர்வுகளைத் தாங்கி, தமிழ்நாட்டு மக்கள், அதேபோல, அரசியல் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், வர்த்தக அமைப்பினர் உள்ளிட்டோர் இலங்கை நாட்டு மக்களுக்கு உதவிகள் செய்ய முன்வந்தால், அவற்றையும் ஒருங்கிணைத்து, ஒன்றிய அரசின் மூலமாக இலங்கை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. அதற்கு முன்னோட்டமாகத்தான் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அவருடைய சொந்த நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயை தான் வழங்குவதாக இன்று அறிவித்திருக்கிறார். அவர், இதை ஏன் அறிவித்திருக்கிறார் என்றால், மற்றவர்களும் அதைப் பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில்தான் அறிவித்திருக்கிறார். ஆகவே, அவருடைய அந்த நல்லெண்ணத்திற்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.